நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.127/2020
அரசு தரப்புக்காக அ.சா.5 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. குமரன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W.8 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28th day of January 2026.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.22)

நான் தற்போது காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் மோவூர் வடக்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ஆம் வரும் காட்டுமன்னார் கோயில் தாலுக்கா நாட்டார் மங்கலம் என்னும் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 04.06.2020 ஆம் தேதி தவசந்தரி என்ற பெண் இறந்துவிட்டதாக ஒரு தகவல் வந்ததை எங்கள் உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவித்தேன். மறுநாள் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் எனக்கு போன் செய்து நாட்டார் மங்கலம் கிராமத்தில் உள்ள காளியம்மன் கோவில் தெருவிற்கு வருமாறு சொன்னார்கள். நானும் கிராம உதவியாளர் தீபா என்பவரும் காலை 6.00 மணி அளவில் காளியம்மன் கோவில் தெருவிற்கு சென்றோம். போலிசார் அஞ்சாபுலி த.பெ.சாமிதுரை என்பவர் வீட்டின் பின்புறம் உள்ள கூரை வீட்டை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் உதவியாளரும்

கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். (அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்னர் 18.07.2020 ஆம் தேதி சேத்தியாதோப்பு காவல் துணை கண்காணிப்பாளர் நாட்டார் மங்கலம் சிவன் கோவில் அருகே வருமாறு தகவல் சொன்னார்கள். நானும் எனது கிராம உதவியாளர் தீபா என்பவரும் காலை 10.00 மணி அளவில் சிவன் கோயில் அருகே சென்று அங்கு போலிசார் ஆஜர் எதிரியை விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரி சொன்ன விவரங்கள் போலிசார் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். சாட்சியாக நானும் கிராம உதவியாளர் தீபா என்பரும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான்.(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 11.32)

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.